தொழிற்சாலைகள் துவக்க உரிமங்கள்

* **342 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1969-70-ம் ஆண்டில் தனியார் துறை, கூட்டுறவுத்துறை, அரசுத்துறை ஆகியவற்றின் மூலம் எத்தனை தொழிற்சாலைகள் துவக்கப்படுவதற்கான அனுமதி மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

ஆண்டு.		தனியார் துறை.	கூட்டுறவுத் துறை.	மாநில அரசுத் துறை.	மத்திய அரசுத் துறை.
1969	..	95	இல்லை.	2	2
1970	..	136	இல்லை.	6	1

திரு. என். கிட்டப்பா : இதில் எந்தெந்த வகையினருக்கு எவ்வளவு உரிமங்களுக்கு மத்திய அரசினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அன்னியச் செலாவணி தேவைப்படாத தொழில்களுக்காவது காலதாமதமில்லாமல் அனுமதி வழங்கும்படி மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்தத் தொழில்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் காலதாமதம் இருக்கக் கூடாது என்பதை மத்திய அரசிடம் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தொழில் துறையில் பெர்மிட் வழங்கும்போது, பெர்மிட்டை இன்னொருவருக்கு விற்றுவிட்டு பெர்மிட் பெற்றவர் தொழில் நடத்தாமல் இருப்பது ஏதாவது நம் மாநிலத்தில் உண்டா? இப்படிப் பெர்மிட் பெற்றவர்கள் தொழில்களை நடத்துவதற்குக் காலதாமதம் ஆவதன் மூலம் பெர்மிட் கொடுப்பதால் என்ன பிரயோஜனம்? அரசாங்கம் இது சம்பந்தமாக ஏதாவது தீர்க்கமான முடிவிற்கு வந்திருக்கிறதா?

1972 மார்ச் 7]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் உரிமம் வழங்குவதும் அதை அமல் நடத்துவது என்பதும் மத்திய அரசின் பொறுப்பாகும். நம்மைப் பொறுத்தவரையில் இப்படி நம் மாநிலத்தில் கொடுக்கப்பட்டவை காலதாமதமாக்கப்படுமானால் அதை மாநில அரசே எடுத்து நடத்துவதற்கு மத்திய அரசு வழி வகுக்க வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்தி வருகிறோம்.

மாமந்தூரில் கனி வளங்கள்

*** 343 வினா.—திரு. ந. நாச்சியப்பன் :**
திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், மாமந்தூர் என்ற இடத்தில் தாமிரம் கிடைப்பதாக ஆய்வு செய்யப்பட்டு பல ஆண்டு ஆகியும் இன்னும் வேலை துவக்கப்படாததின் காரணம் என்ன?

(இ) அவ் வேலை எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ)—இந்திய புவியியல் பிரிவு தென்னாற்காடு மாவட்டத்தில் மாமந்தூர் அருகில் தாமிரம், ஈயம், துத்தநாகம் கலந்த கனிப்பொருள் சுமார் 9 லட்சம் டன் அளவில் இருப்பதாகவும் அது பூமியில் 700 அடி வரையில் பரந்திருப்பதாகவும் கண்டுபிடித்துள்ளது. இவ்விடத்தில் கனிவளம் சிறிதளவே காணப்படுவதால், இந்திய புவியியல் பிரிவு மேற்கொண்டு ஆராய்ச்சி செய்ய சிபாரிசு செய்தது. அதனால் தமிழ்நாடு கனிவள வளர்ச்சித் திட்டம் மேற்கொண்டு இவ்விடத்தில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இது சம்பந்தமான வேலை தொடர்ந்து நடந்து வருகிறது. இக்கனி வளத்தை பயன்படுத்துவது இவ்வாராய்ச்சி முழுவதும் முடிந்த பின் கிடைக்கும் பலனைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும்.